# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8074756

C

1. District : திண்டுக்கல் மாவட்டம்   PS: V&AC காவல்நிலையம்   Year: 2021 ஆண்டு   FIR No.: 07/21 மு.த.அ. எண்   Date: 09.12.2021 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018   Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல்   Date to : நாள் வரை தீபாவளி முடிந்து ஒருவாரம் கழித்து. 02.12.21 at 10.00 hrs

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை 07.12.21 at 11.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.12.21   Time : நேரம் 19.00

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.12.21   Time : நேரம் 06.00

4. Type of Information : Written/ Oral : ✓ (Written)
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 25 KM வடக்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி உதவி மின் பொறியாளர் அலுவலகம், சேனன்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : T. நடராஜன்   (b) Father's/ Husband's Name : S. தங்கவேல்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்   தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : 45/21 நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : இந்தியன் நாட்டினம்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : - வழங்கப்பட்ட நாள்   Place of Issue : - வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : மேஸ்திரி தொழில்   (g) Address : முகவரி கொண்ணைய நாயக்கனூர், முளைவில்செட்டியூர் (Po), வேடசந்தூர் (வழி), திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. இரவி, உதவி மின் பொறியாளர், சேனன்கோட்டை திண்டுக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 09-12-21 [signature] 09/12/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.12.2021 at 09.00hrs

Name: பெயர் ஜெ. ஜோதிராணி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ……….

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:7/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 08.12.2021-ம் தேதி மாலை 19.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம். வேடசந்தூர் வழி, முருநெல்லிக்கோட்டை போஸ்ட், கெண்டையகவுண்டனூரில் வசிக்கும் தங்கவேல் அவர்களின் மகன் T.நடராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திண்டுக்கல் அவர்கள் பெற்று ஒப்புதல் செய்து கொடுத்த புகாரை நான் 08.12.2021ம் தேதி மாலை 19.00 மணிக்கு பெற்று 09.12.2021-ம் தேதி காலை 06.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: அனுப்புநர் T.நடராஜன், த/பெ .S.தங்கவேல், கெண்டையகவுண்டனூர், முருநெல்லிக்கோட்டை (PO), வேடசந்தூர் (வழி), திண்டுக்கல் மாவட்டம். பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தற்போது வேடசந்தூர் அருகே சீத்தாமரம் நால் ரோட்டில் உள்ள ஆதிசங்கரா ஸ்பின்னிங் மில்லில் மேஸ்திரியாக வேலை செய்து வருகிறேன். எனக்கு குருநாதநாயக்கனூரில் சுமார் 4.30 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. கடந்த 2-11-2009ம் தேதி எனது தந்தை தங்கவேல் எங்களுடைய விவசாய நிலத்தில் 609/1A சர்வே எண்ணில் போடப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிற்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவச மின்சார இணைப்பு வேண்டி ஒட்டன்சத்திரம் EE ஆபிஸில் மனு கொடுத்திருந்தார். அதன் பிறகு கடந்த 2012ம் வருடம் எனது தந்தை இறந்து விட்டார். இலவச மின்சார இணைப்பு கிடைக்க தாமதமானதால் எனது விவசாய நிலத்தில் சர்வே எண் 609/3A ல் உள்ள கிணற்றிற்கு நான் கடந்த 2012ம் வருடம் எனது பெயரில் கமர்சியல் மின்சார இணைப்பு பெற்று தற்போது வரை விவசாயம் செய்து வருகிறேன். இந்த நிலையில் இந்த ஆண்டு தீபாவளிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு எங்கள் ஏரியா வையர்மேன் திரு.சுப்பிரமணி என்பவர் எனது தோட்டத்து வீட்டிற்கு வந்து என்னிடம் எனது தகப்பனார் பெயருக்கு இலவச மின்சாரம் வந்திருப்பதாகவும் அது சம்பந்தமாக தேவையான வருவாய் ஆவணங்களை எடுத்துகொண்டு AEயை வந்து பார்க்குமாறு கூறினார். எனவே நான் VAOவிடமிருந்து என்னுடைய நிலத்திற்குரிய சிட்டா, அடங்கல் மற்றும் வரைபடம் ஆகியவற்றை பெற்றுக்கொண்டு தீபாவளி முடிந்த பின்பு ஒருவாரம் கழித்து ஒருநாள் காலை சுமார் பத்து மணிக்கு சேனன்கோட்டையில் உள்ள EB ஆபிஸிக்கு சென்று AE திரு.ரவி அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் தங்கவேல் என்பவர் யார் என்று என்னிடம் கேட்டார். நான் எனது தகப்பனார் என்று சொன்னேன். அப்போது அவர் எனது தகப்பனார் பெயருக்கு மின் இணைப்பு வந்திருப்பதாகவும் ரூபாய்.25,000/- மற்றும்

ரூபாய்.50,000/-ஆகிய இரண்டு ஸ்கீம்களில் பணம் கட்டியிருப்பதால் ஏதாவது ஒன்றை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லி என்னிடம் ஒரு விண்ணப்பத்தில் கையொப்பம் வாங்கினார். மேலும் எனது தகப்பனார் பெயரில் வந்திருக்கக்கூடிய மின்சார இணைப்பை எனது பெயருக்கு முதலில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறினார். நான் பெயர் மாற்றம் செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் ஒரு விண்ணப்பம் எழுதிக்கொடுங்கள் என்று கேட்டார். நானும் பெயர் மாற்றத்திற்காக விண்ணப்பம் எழுதி AE யிடம் கொடுத்தேன். மேலும் தந்தையின் இறப்பு சான்றிதழ், தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திர நகல் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அப்போது பெயர் மாற்றம் செய்வதற்கு ரூபாய்.10,000/-வரை செலவாகும் என்று AE கூறினார். நான் இந்தப்பணம் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் என்ன ஊர் நடப்பே தெரியாம இருக்கீங்க, உங்கள் விண்ணப்பத்தின் மீது பரிந்துரை செய்து பெயர் மாற்றம் செய்வதற்கு எனக்கும், மேல் அதிகாரிகளுக்கும் ஆகும் செலவு என்று கூறினார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு என்று சொன்னால் அதை கட்டி விடுகிறேன் என்றும் கூறினேன். அதற்கு அவர் ரூபாய்.10,000/- கொடுத்தால் தான் வேலை நடக்கும் என்று கூறினார். மேலும் AD வந்து கள ஆய்வு செய்த பிறகு பணத்தை ரெடி பண்ணிக்கொண்டு வாருங்கள் என்று சொன்னார். பின்பு நான் வீட்டிற்கு வந்து விட்டேன். பின்பு ஒருநாள் AD,AE மற்றும் போர்மேன் ஆகியோர் வந்து என்னுடைய நிலத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அதன்பிறகு AE என்னை அலைபேசியில் தொடர்பு கொண்டு எல்லாம் ரெடியா இருக்கு எப்ப பணத்தை ரெடி பண்ணிட்டு வர்ரீங்க என்று கேட்டார். இரண்டொரு நாளில் நான் வந்து பார்ப்பதாக கூறினேன். பின்பு பணம் புரட்ட முடியவில்லை. பின்பு அக்கம்பக்கம் உள்ளவர்களிடம் கடனாக பணம் பெற்றுகொண்டு ஏற்பாடு செய்ததில் ரூபாய்.4,000/-ம் தான் கிடைத்தது. அந்தப் பணத்தை எடுத்து கொண்டு கடந்த 02-12-2021ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு AE அலுவலகத்திற்கு சென்று AE யை சந்தித்து, என்னால் பணம் ரூபாய்.4,000/-தான் ஏற்பாடு செய்ய முடிந்தது என்று கூறினேன். அதற்கு அவர் தற்போது கொண்டு வந்துள்ள ரூபாய்.4,000/-த்தை கொடுங்கள் என்று கூறி பணத்தை வாங்கி வைத்துகொண்டு மேலும் ரூபாய்.6,000/-கொடுக்க வேண்டும் என்று கறாராக கூறினார். நான் அவரிடம் மிகவும் சிரமப்பட்டு தான் பணம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு வந்து விட்டேன். பின்பு 07-12-2021ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு AE திரு.ரவி அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது அவர் பணம் ரூபாய்.6,000/- கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் பணத்தை ஏதாவது கொஞ்சம் குறைக்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் பணம் ரூபாய்.6,000/- கொடுத்தால் தான் வேலை நடக்கும் என்று கூறினார். அதற்கு நான் எனக்கு சம்பளம் நாளைக்கு 08-12-2021 ம் தேதி தான் கிடைக்கும் என்று சொன்னேன். அவர் சம்பளம் கிடைத்த பிறகு 09-12-2021ம் தேதி காலை 10 மணிக்கு அலுவலகத்தில் வந்து பணம் கொடுக்குமாறு கூறினார். எனது

தகப்பனார் பெயரில் கிடைக்கப்பெற்ற இலவச மின்சார இணைப்பை எனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய AE திரு ரவி அவர்களுக்கு ரூபாய்.6,000/- லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் ரூபாய்.6,000/- லஞ்சமாக கேட்ட AE திரு.ரவி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன். எனது தந்தை பெயரில் பதிவு செய்த இலவசமின்சார இணைப்பு பதிவு சான்றிதழ் அட்டை, இரண்டு ஸ்கீம்களில் ரூபாய்.500/- கட்டியதற்கான ரசீது மற்றும் எனது தந்தையின் இறப்பச்சான்றிதழின் நகல் ஆகியவற்றை இந்த புகாருடன் இணைத்துள்ளேன். மேலும் சேனன்கோட்டை AE திரு.ரவி அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூபாய்.6,000/-ம் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxxx (T.Natarajan, 08-12-2021)

08.12.2021/19.00hrs, Received the complaint. Inspector Tmt.J.Rupa Geetharani for necessary action. S/d-xxxxx (J.Nagarajan, DSP, V&AC, Dindigul, 08.12.2021)

Sir, Received the complaint on 08.12.2021 at 19.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused is found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.07/2021, u/s. 7(a) of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 09.12.2021 at 06.00 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 09.12.2021)

Original FIR along with written complaint of Tr.T.Natarajan, S/o.S.Thangavel, Kendayagoundanoor, Murunellikottai Post, Vedasandur Via, Dindigul District and with the relevant documents are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

JR 09/12/21

(J.Rupa Geetharani)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.